**செ.வெ.எண்: 35** **நாள்:01.08.2022**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி ரூ.5000 மதிப்பீட்டில் 400 எம்.எல்.டி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் புதிய திட்டத்திற்கான பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகிறது – மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள் தகவல்**

சென்னை மடிப்பாக்கத்தில் ரூ.249.47 கோடி மதிப்பீட்டிலான பாதாரள சாக்கடை திட்டத்தினை மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள் இன்று(01.08.2022) தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

**இந்நிகழ்சியில் மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

பாதாள சாக்கடை திட்டம் என்பது சிங்கார சென்னை திட்டத்தின்கீழ் 184 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதற் கட்டமாக 40.730 கிலோமீட்டரும், ரூ.65 கோடி செலவிலே இரண்டாம் கட்டமாக 20 கிலோமீட்டரும் பணியை இந்த ஆண்டு எடுத்திருக்கிறோம். ரூ.150 கோடி செலவிலே 3 திட்டங்கள் ராம் நகர், சீனிவாசா நகர், ராமலிங்கம் நகர், ஷீலா நகர், அதேபோல் முதல்கட்டமாக ரூ.29.33 கோடி மதிப்பிட்டிலும் வடக்கு ராமலிங்கம் நகர் ரூ39.33 கோடி பாதாள சாக்கடை திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மடிப்பக்கம், கிருபா நகர், பாலாஜி நகர், ரூ.66கோடி ரூபாய் செலவிலே நடைபெற்று இருக்கிறது. சிங்கார திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சியில் மொத்தம் 900-க்கும் மேற்பட்ட கழிவறைகள் இருக்கிறது. கழிவறைகள் முழுமையாக துய்மைப்படுத்தப்படும் திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக 32 கோடி ரூபாய் செலவிலே 366 இடங்களிலே கழிவறைகள் புதிதாக கட்டப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒரு பக்கம் பாதாள சாக்கடைத் திட்டம், ஒரு பக்கம் கழிவறைகள் திட்டம் தொடர்ந்து மாநகராட்சி சார்பாக இந்த பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பாதாள சாக்கடை திட்டங்கள் மொத்தம் 42 இடங்களில் எடுத்து இருக்கிறார்கள். அதில் 17 பணிகள் முடிவுற்று இருக்கிறது. பணிகள் நடைபெற்று வருவது 8 இடங்களில். மீதம் நடைபெற வேண்டிய இடங்கள் 17. அனைத்து பணிகளையும் உரிய காலத்திற்குள் முடித்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

சென்னை மாநகராட்சி பகுதிகளில் தற்போது 1128 கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. கத்திவாக்கம், மணலி, மாதரவரம், அம்பத்தூர், மடிப்பாக்கம், பள்ளிக்கரணை, கொட்டிவாக்கம், பாலவாக்கம் ஆகிய இடங்களில் 4978 கோடி ரூபாய் செலவில் பணிகள் நடைபெற்று இருக்கிறது. நம்முடைய முதல்வர் அவர்கள் வருடத்திற்கு 500 கோடி ரூபாய் சிறப்பு நிதியாக வழங்கி வருகிறார்கள்.

மழைநீர் வடிகால் பணிகள் அனைத்து இடங்களிலும் முழுமையாக நடைபெற்று வருகிறது. கிழக்கு கடற்கரை சாலைப் பகுதி மிகப்பெரிய அளவிலே விரிவடைந்து வருகிறது. அப்பகுதிவாழ் மக்களுக்கு தேவையான குடிநீ உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி தருமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், நெம்மேலியில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தின் மூலம் பல்வேறு பகுதிகளுக்கு தற்போது 100 எம்.எல்.டி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 3 மாதத்திற்குள் 150 எம்.எல்.டி தண்ணீர் கொண்டுவரப்படவுள்ளது. மேலும், முதலமைச்சரின் அறிவுறுத்தலின்படி ரூ.5000 கோடி மதிப்பீட்டில் 400 எம்.எல்.டி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் புதிய திட்டத்திற்கான பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகிறது. ஏற்கனவே இருக்கின்ற பெரிய ஏரிகளில் மழைநீரை சேமித்து, என்றைக்கும் குடிநீர் பற்றாக்குறை ஏற்படாதவண்ணம் தர வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

நகர்ப்புறங்களில் ஏற்கனவே உள்ள பாசனப் பகுதிகள் அனைத்தும் நகரமாக மாறிவிட்ட காரணத்தால் 1000, 500 ஏக்கரில் உள்ள ஏரிகளை முழுமையாக தூர் வாரி தண்ணீரைத் தேக்கி குடிநீர் பற்றாக்குறை எற்படாதவண்ணம் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். மடிப்பாக்கம் பாதாள சாக்கடை திட்டப் பணிகளை 30 மாத கால அளவிற்குள் முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.அரவிந்த் ரமேஷ், பெருநகர சென்னை மாநாகராட்சி முதன்மை செயலாளர் / ஆணையர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., சென்னை பெருநகர குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.இரா.கிர்லோஷ்குமார்,இ.ஆ.ப., செயல் இயக்குநர் திரு.ராஜகோபால் சுன்கரா,இ.ஆ.ப., மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்**

**சென்னை பெருநகர குடிநீர் வாரியம்**